உ

பரமபதிதுணை.

திருமாலிருஞ்சோலைமலை

அழகர் வருகைப்பதிகம்.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதருஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதருஸ் என். சி.

90

விளம்பரம்.

அற்புத பூலோகரம்பை கதை.

இதனால் சகலமான கனவான்களுக்கும் தெரிவிப்பது யாதெனில், இதுவரையிலும் வெளிவந்திருக்கும் அராபிக்கதை, பாரீஸ்கதை, குலேபகாவலிகதை நான்குபக்கிரிகள் கதை இன்னும் சில சக்கிரவர்த்திகள் கதை முதலானதும் அவரவர்கள் வாசித்தும் பிறரால் செலக்கேட்டும் இருப்பீர்கள் ஆகையால் ஷை கதைகளைப்போன்ற ஆயிரம்கதைகளை ஒன்றுய்த்திரட்டி உருக்கிவார்த்ததைப்போல் இப்போது ஏற்படுத்தியிருக்கும் (அற்புத பூலோகரம்பைகதை என்னும் தலைப்புபெயர்கொண்ட ஷை கதையானது மானிடமென்னும் நமது அருமையான பிறவிக்கு கற்பகத்தருவைப்போல் கிடைத்திருக்கிறதென்றறிக இக்கதையை தாங்களே படித்தாவது பிறரால் சொல்லவாவது கேட்பீர்களாகில் இரும்பைக் காந்தமிழுக்கும் பாவனைபோல் ஐம்புலன்களையும் தன்வசத்தில் கிரகித்துக்கொள்ளுவது மன்றி ஆனந்தபரவசமாய் அவரவர் மனதை உருகச் செய்யுமென்பது திண்ணம் மேலும் இதில் அடங்கிய சாராம்சங்களை விவரிக்குமிடத்து மகா அற்புதமாயிருக்கும் அதாவது.

ஐயாவே! இந்தக்கதையில் ஆங்காங்கு சந்திக்கும் நவரச அலங்காரங்களை முற்றும் விவரித்தெழுத இடமில்லாமையால் இம்மட்டில் விடப்பட்டது. கிளேஸ்காகிதத்தில் உயர்ந்த பயிண்டு செய்தது.

இதன் விலை ரூபா. 1 0 0.

உ

பரமபதிதுணை.



அழகர் வருகைப்பதிகம்.

காப்பு - வெண்பா.

சிலையைமுன்னாள் மின்னாகச் செய்தபெரு மான்சோலை
மலையழகர் மீதுகவி வாழ்த்தவே—கலைமுனிவன்
வெம்பிக்கை யால்ப்புடைக்க மேவுமவ னைத்தடுத்தாள்
தும்பிக்கை யாழ்வார் துணை.

விருத்தம்.

கண்ணன்வருக வுலகளந்த கடவுள்வருகக் கார்மேக
வண்ணன்வருக ராவணசம் மாரன்வருக மண்ணையுண்ட
திண்ணன்வருக வெங்கள்குல தெய்வம்வருகச் சிவன்றேவி
அண்ணன்வருக சோலைமலை அழகன்வருக வருகவே. 1)

மெய்யன்வருகப் பரமபத வேந்தன்வருக வீணருக்குப்
பொய்யன்வருகச் சோதைதரும் புதல்வன்வருகப் பொருந்தும்வளைக்
கையன்வருகச் சிறியேனென் கண்முன்வருகக் கடலடைத்த
ஐயன்வருகச் சோலைமலை அழகன்வருக வருகவே. (2)

மாயன்வருக வெண்ணையுண்ட வாயன்வருக வணங்குமன்பர்
நேயன்வருகப் பெண்வடிவாய் நின்றான்வருக நிதிகொடுக்குந்
தூயன்வருக யிரவிகுல சோமன்வருகச் சுந்தரஞ்சேர்
ஆயன்வருகச் சோலைமலை அழகன்வருக வருகவே (3)

முத்தன்வருக நான்மறைக்கு முதல்வன்வருக மூவுலகுங்
கத்தன்வருக வெனவணங்குங் கடவுள்வருகக் கதியளிக்குஞ்
சுத்தன்வருகப் பாண்டவர்கள் தூதன்வருகத் தொண்டர்தங்கள்
அத்தன்வருகச் சோலைமலை அழகன்வருக வருகவே. (4)

பூண்டான்வருகத் துளபமணிப் புனிதன்வருகப் பொய்யர்பணி
வேண்டான்வருகத் தொண்டர்பிழை விரும்பான்வருக விரிந்தபுகழ்
நீண்டான்வருக வெங்குமொன்றாய் நிறைந்தான்வருக நீள்கயத்தை
ஆண்டான்வருகச் சோலைமலை அழகன்வருக வருகவே. (5)

முடித்தான்வருகப் பாரதப்போர் முகுந்தன்வருக முனைந்துவில்லை
ஒடித்தான்வருகக் கஞ்சன்பலகை யொழித்தான்வருக வுரகமிசை
நடித்தான்வருக ஜானகிக்கோர் நாதன்வருக நயந்துதொடை
அடித்தான்வருகச் சோலைமலை அழகன்வருக வருகவே. (6)

ஜோதிவருகத் தென்புதிடஞ் சொல்லவருகத் துரைவருக
நீதிவருக மனத்துயரம் நீக்கவருக நேசரனு
பூதிவருகக் கருணைமழை பொழியவருகப் புகழுமறை
ஆதிவருகச் சோலைமலை அழகன்வருக வருகவே. (7)

பெருமைவருக வெனையாளெம் பெருமான்வருகப் பேசரிதாம்
ஒருமைவருகத் திருமார்பி லுறைந்தான்வருக வுண்மைசொல்லக்
குருமைவருக மலையெடுத்த கோமான்வருகக் கோருமெங்கள்
அருமைவருகச் சோலைமலை அழகன்வருக வருகவே. (8)

விமலன்வருக வணங்குமன்பர் விகிதன்வருக மேன்மைதருந்
தமலன்வருக வெனையாளென் சாமிவருகத் தயைவருக
நிமலன்வருகப் பாண்டவர்கள் நேசன்வருக நினைக்குமுன்னே
அமலன்வருகச் சோலைமலை அழகன்வருக வருகவே. (9)

மருவேவருக மணமிகுந்த மலரேவருக வாக்குதவுங்
குருவேவருகப் பூமடந்தை கொழுநன்வருகக் குற்றமிலா
உருவேவருகப் பொய்யர்மனத் துறையான்வருக வோடியென்முன்
அருகேவருகச் சோலைமலை அழகன்வருக வருகவே. (10)

நன்றேவருகச் சுகமுதவும் ராமன்வருக நாடியென்முன்
இன்றேவருகக் கரபதிமீ தேறிவருக யெங்குமிறை
ஒன்றேவருக நிஜதாஸ ருறவேவருக வுனைக்கருதும்
அன்றேவருகச் சோலைமலை அழகன்வருக வருகவே (11)

அழகர் வருகைப்பதிகம்

முற்றிற்று.

விளம்பரம்.

சாதகாலங்காரம்.

மூலமும் - உரையும்.

இச் சென்னையின்கண் முன்னோர்கள் அருளிச்செய்த பல சோதிட நூல்கள் உள்ளன. அவற்றுள் இரண்டொரு நூற்களே மிக்க பயன்படத்தக்கவைகளும், வரிசைக்கிரமமாகச் செய்யப்பட்டவையுமாகும். அப்படிப்பட்டவற்றுள் சாதகாலங்காரம் என்பதுஎன்று அதற்கு இதுவரைக்கும் உரையில்லாத பெருங்குறையை நோக்கிப் பலரும் என்னை வற்புறுத்தியபடியால் அதற்குத் தக்கவாறு உரையெழுதி பன்னிரண்டு பாகங்களும் நன்றாய் விளங்கும்படி விளக்கி அச்சிட்டிருக்கின்றோம். வேண்டியவர்கள் எம்மிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இதன் விலை ரூபா 1 8 0